**<u>சுருக்கம்</u>**

பள்ளிக் கல்வி – அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை மற்றும் இடைநிலைக் கல்வி பொதுத் தேர்வுகள் – விடைத்தாட்களின் முகப்புச் சீட்டிலுள்ள Barcode-னை ஸ்கேன் செய்வதற்கு விடைத்தாள் மதிப்பீட்டு மையங்களுக்கு தேவைப்படும் Barcode Readers கொள்முதல் செய்யப்பட்டதற்கு பின்னேற்பு மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>பள்ளிக்கல்வி (ஜிஇ1) துறை</u>

<u>அரசாணை (1டி) எண்.</u> 206 <u>நாள் : 25.8.2014</u>

திருவள்ளுவர் ஆண்டு 2045
ஐய வருடம், ஆவணி 9

படிக்கப்பட்டவை :

1. அரசாணை (1டி) எண்.268, பள்ளிக் கல்வித்துறை, நாள் 09.07.2012
2. அரசாணை (நிலை) எண்.150, பள்ளிக் கல்வி (ஜிஇ1) துறை, நாள்.07.08.2013
3. அரசு தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க. எண்.052279 /எச்.1 /2013, நாள் 28.11.2013 மற்றும் 08.07.2014.

----

<u>ஆணை</u>

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் மதிப்பெண் சான்றிதழ்களில் பார்கோடினை சரிபார்ப்பதற்கு கொள்முதல் செய்ய அனுமதிக்கப்பட்ட 8 பார்கோடு ரீடர்கள் வாங்க அனுமதி அளிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் மேல்நிலைத் தேர்வில் இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல், கணிதம், வணிகவியல், கணக்குப்பதிவியல், வணிகக்கணிதம் மற்றும் தொழிற்பாடப் பிரிவின் கீழ்வரும் பொறியியலும் தொழில்நுட்பம் சார்ந்த பாடங்களுக்கு மட்டும் மாற்றெண்ணிட்டு மதிப்பீடு செய்வதற்குப் பதிலாக, அனைத்துப் பாடங்களுக்கான மதிப்பீட்டிலும் மந்தணத் தன்மை காக்கும் பொருட்டு, தேர்வர்களின் விவரங்கள், புகைப்படம் மற்றும் இரகசியக் குறியீடு (Barcode) அச்சிட்ட முகப்புப் படிவத்தினை (Top sheet) முதன்மை விடைத்தாளுடன் இணைத்து தேர்வர்களுக்கு வழங்கும் புதிய முறையினை செப்டம்பர் 2013 பருவத்தில் சோதனை முறையில் செயலாக்கம் செய்திட அனுமதி ஆணை வழங்கப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் இயக்குநர் கடிதங்களில், நடைபெற்ற செப்டம்பர் 2013, மேல்நிலை மற்றும் இடைநிலைப் பொதுத் தேர்வுகளில் இப்புதிய நடைமுறை திருப்திகரமாக செயல்படுத்தப்பட்டது என்றும், விடைத்தாட்கள் திருத்தப்பட்ட அன்றே, ஒவ்வொரு விடைத்தாளுக்கான முகப்புச் சீட்டிலுள்ள இரகசியக் குறியீடு, பார்கோடு ஸ்கேனர்ஸ் மூலம் ஸ்கேன் செய்யப்பட்டு, உடன் மதிப்பெண் கணினியில் பதியப்பட்டது என்றும், இம்முறையைக் கையாண்டதால், இதுகாறும் பின்பற்றி வந்த மதிப்பெண் தாட்கள் தயாரிக்கும் பணி அறவே தவிர்க்கப்பட்டதுடன், கணினியில் விரைவாகவும், துல்லியமாகவும் மதிப்பெண்கள் பதியப்பட்டு, மதிப்பீடு செய்த நாளன்றே இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் ஏதுவாக அமைந்தது என்றும், விடைத்தாளில் மாற்றெண்ணிடுவதற்குப் பதிலாக

பார்கோடு முறையினை அறிமுகப்படுத்தியதால், மந்தணத் தன்மை முழுமையாக காக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், மாற்றெண்ணிடும் முறையில் தவறான மாற்றெண் இடுதல், மதிப்பெண் பட்டியலில் தவறுகள் ஏற்படுதல் போன்ற நிகழ்வுகள் தடுக்கப்பட்டுள்ளன என்றும், எனவே, தொடரும் பருவத் தேர்வுகளில் இம்முறையினையே நடைமுறைப்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**4.** மேலும், நடைபெற்ற மார்ச் **2014** மார்ச் பருவத் தேர்வில் மேல்நிலை மற்றும் எஸ்.எஸ்.எல்.சி., பொதுத் தேர்வெழுதிய தேர்வர்களின் விடைத்தாட்களை மதிப்பீடு செய்வதற்காக, கல்வி மாவட்டங்கள் தோறும் அமைக்கப்பட்ட மதிப்பீட்டு மையங்களுக்கு பிரித்து அனுப்பப்பட்டன என்றும், மார்ச் **2014** மேல்நிலை மற்றும் எஸ்.எஸ்.எல்.சி பொதுத் தேர்விற்கு **79** விடைத்தாள் முகாம்கள் அமைக்கப்பட்டன என்றும், மார்ச் **2014** மேல்நிலைத் தேர்விற்கு கொள்முதல் செய்யப்பட்ட Barcode Scanner-களே பத்தாம் வகுப்பு மதிப்பீட்டு முகாம்களுக்கு பயன்படுத்தப்பட்டது என்றும், மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாட்களில் உள்ள பார்கோடினை ஸ்கேன் செய்து மதிப்பெண்களை கணினியில் பதிவு செய்திட ஒரு விடைத்தாள் மதிப்பீட்டு மையத்திற்கு **6** Barcode Readers அவசியம் தேவைப்படுகிறது என்றும், முகாம் அலுவலர்களே தத்தமது மாவட்டங்களில் உள்ள Barcode Scanner விற்பனை செய்யும் இடங்களிலே கொள்முதல் செய்வதுதான் சிறந்தது எனவும், கொள்முதல் செய்யும் பார்கோடு கருவியில் தொழிற்நுட்பக் காரணங்களினால் ஏற்படும் கோளாறுகளை நிவர்த்தி செய்தல், தொழிற்நுட்ப உதவிகள் பெறுதல் ஆகியவற்றை தத்தமது மாவட்டங்களிலேயே உடனுக்குடன் பெற்றால்தான், பார்கோடிங் ஸ்கேனிங் செய்யும் பணியினை விரைந்து முடித்து மதிப்பெண்களை உடனுக்குடன் கணினியில் பதிவு செய்ய இயலும். எனவே, தேர்வுத் துறையால் மொத்தமாக Barcode Scanners கொள்முதல் செய்து விடைத்தாள் மதிப்பீடு மையங்களுக்கு ஒப்படைப்பதை விட, ஒவ்வொரு விடைத்தாள் மதிப்பீடு மைய முகாம் அலுவலருக்கும் சில்லறைச் செலவினத்தில் கூடுதல் தொகையினை ஒதுக்கீடு செய்து, முகாம் அலுவலர்களே Barcode Readers–களை கொள்முதல் செய்திடலாம் என்று தெரிவித்து தற்போது, சில்லறைச் செலவினத் தலைப்பின் கீழ் ஒவ்வொரு மேல்நிலைத் தேர்வு விடைத்தாள் மதிப்பீடு மையத்திற்கு ரூ.**10,000/–**மும், இடைநிலைக்கல்வி பொதுத் தேர்வு விடைத்தாள் மதிப்பீடு மையத்திற்கு ரூ.**8,000/–**மும் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்றும், பார்கோடிங் ஸ்கேனிங் முறையை தொடர்வதால், ஒவ்வொரு விடைத்தாள் மதிப்பீட்டு முகாமிலும் **6** Barcode Readers கொள்முதல் செய்வதற்கு சில்லறைச் செலவினத்தில் கூடுதல் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது என்றும் எனவே, நடைபெற்ற மார்ச் / ஏப்ரல் **2014–**ல் மேல்நிலை மற்றும் இடைநிலைக் கல்வி பொதுத் தேர்வுகளுக்கான விடைத்தாள் மதிப்பீட்டு மையங்களில் Barcode Readers கொள்முதல் செய்திட, **79** மதிப்பீட்டு முகாம்களுக்கு ரூ.**58,56,660/–** (ரூபாய் ஐம்பத்தெட்டு இலட்சத்து, ஐம்பத்தாறாயித்து அறுநூற்று அறுபது மட்டும்) (த.தொ.கு. எண். **2202 02 108 AA 0520**) என்ற சில்லறைக் கணக்குத் தலைப்பின் கீழ் இந்த ஆண்டு மட்டும் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து வழங்குமாறும், இத்தொகையிலிருந்து ஒவ்வொரு விடைத்தாள் மதிப்பீடு மையத்திற்கும் ஏற்கனவே சில்லறைக் கணக்குத் தலைப்பின்கீழ் வழங்கப்படும் தொகையுடன் கூடுதல் நிதி ஒதுக்கீடாக ரூ.**90,000/–** (ரூபாய் தொண்ணூறாயிரம் மட்டும்) வழங்கிட அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணை வழங்குமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**5.** அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்து அதனை ஏற்று, மார்ச் / ஏப்ரல் **2014–**க்கான மேல்நிலை மற்றும் இடைநிலைக் கல்வி பொதுத் தேர்வுகளுக்கான விடைத்தாள் மதிப்பீட்டு முகாம்களில் அந்தந்த முகாம் அலுவலர்கள், அந்தந்த முகாம் மையத்திலேயே Barcode Readers கொள்முதல் செய்த செயலுக்கு பின்னேற்பும், அதற்கான செலவினத்தொகை ரூ.**58,56,660/–**க்கு (ரூபாய் ஐம்பத்தெட்டு

இலட்சத்து, ஐம்பத்தாறாயித்து அறுநூற்று அறுபது மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

**6.** மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

> "2202–பொதுக் கல்வி – 02– இடைநிலைக் கல்வி – 108–தேர்வுகள்–I திட்டத்தில் சேராதது – AA அரசு தேர்வு இயக்குநர் நடத்தும் தேர்வுகள்–76 கணினியும் துணைப் பாகங்களும் –01 வாங்குதல்'' (கு.தொ.கு. 2202 – 02– 108–AA-7612 )

**7.** மேலே பத்தி 5ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள இக்கூடுதல் செலவினம் 2014–2015ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். இருப்பினும் சட்டமன்றத்தில் ஒப்புதலை பெறும்பொருட்டு, இச்செலவினத்தை 2014–2015–ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்படவேண்டும். இதனை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2014–2015–ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates 2014-2015)– ல் சேர்க்கத்தக்க வகையில் உரிய விவரங்களுடன் நிதித் (கல்வி–II) துறைக்கு அனுப்புமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**8.** இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 41112/Edn-II/2014 நாள் 20.08.2014 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 936 ல் (தொள்ளாயிரத்து முப்பத்தாறு) பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,சென்னை–6.
தேசிய தகவலியல் மைய தொழில்நுட்ப இயக்குநர், சென்னை–9
அரசு தகவல் தொகுப்பு விவர மையம், சென்னை–25
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.

நகல்
நிதித் (கல்வி – II ), சென்னை–9,
நிதித் ( வரவு செலவு பொது –I/ II)துறை சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.